The Hindu Tamil

தி இந்து
தமிழால் இணைவோம்

16/03/2018
Page # 14

வங்கியாளர்களுடன் இணைந்து

# கிளையை தொடங்கியது சூர்யோதய் வங்கி

■ சென்னை

நேரடியாக வங்கியே கிளைகளை தொடங்காமல் பங்குதாரர்கள் மூலமாக சூர்யோதய் ஸ்மால் பைனான்ஸ் வங்கி சென்னையில் முதல் கிளையை நேற்று தொடங்கி இருக்கிறது. சென்னை நங்கநல்லூரில் அமைந்திருக்கும் இந்த கிளையை வங்கியின் தலைமைச் செயல் அதிகாரி பாஸ்கர் பாபு தொடங்கிவைத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது: முக்கியமான இடங்களில் வங்கியே நேரடியாக கிளையை தொடங்குறோம். ஆனால் சிறு சிறு பகுதிகளுக்கும் செல்வதற்கு ஏற்ப பங்குதாரர்களுடன் இணைந்து சிறிய கிளையை தொடங்கி இருக்கிறோம். செயல்பாடு அடிப்படையில் ஒரு பங்குதாரரே ஒன்றுக்கும் மேற்பட்ட கிளைகளை தொடங்க முடியும். முதல் சில மாதங்களுக்கு எங்களுடைய பங்குதாரர்களுக்கு நிரந்த தொகை வழங்குவோம். அதனைத் தொடர்ந்து செயல்பாடுகளுக்கு ஏற்ப பங்குதாரர்களுக்கு தொகை வழங்கப்படும்.

வங்கித்துறையில் அனுபவம் மற்றும் தொழில்முனைவு எண்ணம் இருப்பவர்களுடன் இணைந்து தொடங்க இருக்கிறோம். பங்குதாரர்களுடன் தொடங்கப்படும் கிளைகளில் வங்கியின் பணியாளர் ஒருவர் இருப்பார். மீதமுள்ள பணியாளர்களை பங்குதாரர் முடிவு செய்வார். நங்கநல்லூர் கிளை இந்த வகையில் செயல்படும். இந்த கிளைகள் செயல்படும் விதத்தை பொறுத்து பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படும் கிளைகளின் எண்ணிக்கையை உயர்த்துவோம் என்றும் அவர் கூறினார்.